www.tnpsctoday.com

# TNPSC நடப்பு நிகழ்வுகள் TNPSC TODAY டுடே

காலை எழுந்தவுடன் படிப்பு!

**சனிக்கிழமை | 25.01.2025**

# நடப்பு நிகழ்வுகள்

# DAILY NEWS PAPER CLIPS

## தினம் ஒரு திருக்குறள் 85

**வித்தும் இடல்வேண்டும் கொல்லோவிருந்து ஓம்பி, மிச்சில் மிசைவான் புலம்?.**

விருந்தினரை முன்னே போற்றி உணவளித்து மிஞ்சிய உணவை உண்டு வாழ்கின்றவனுடைய நிலத்தில் விதையும் விதைக்க வேண்டுமோ?

Join our telegram channel

https://t.me/tnpsctodaynews

TNPSC

குரூப்-1, குரூப்-2, குரூப்-4 போன்ற போட்டித் தேர்வுகளுக்கு பயன்படும் வகையில்

**பிரபல நாளிதழ்களில் வெளியாகும்**

மிக முக்கியமான நடப்பு நிகழ்வுகளின் செய்தித் துணுக்குகள்...

## நடப்பு நிகழ்வுகள் Current Affairs

**2025 TNPSC பாடத்திட்டம்**

New Syllabus

### பொது அறிவியல் (General Science)

1. இந்தியாவின் வளர்ச்சியில் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் பங்கு மற்றும் தாக்கம் (Role and Impact of Science and Technology in the Development of India)

### புவியியல் (Geography)

2. பொது புவியியல் (General Geography)
3. இந்தியாவின் புவியியல் (Geography of India)
4. தமிழ்நாட்டின் புவியியல் (Geography of Tamil Nadu)

### வரலாறு (History)

5. இந்தியாவின் வரலாறு, பண்பாடு மற்றும் தேசிய இயக்கம் (History, Culture of India, and Indian National Movement)
6. செய்திகளில் இடம் பெற்ற சிறந்த ஆளுமைகளும் / இடங்களும் (Eminent personalities and places in news )
7. விளையாட்டு (Sports)
8. நூல்களும் ஆசிரியர்களும் (Books and authors)

### இந்திய ஆட்சியியல் (Indian Polity)

9. இந்திய அரசியலமைப்பு மற்றும் இந்தியாவின் மீது உலகலாவிய அரசியல் மாற்றங்களின் தாக்கம் (Indian Polity and Emerging Political Trends across the World affecting India)

### இந்திய பொருளாதாரம் (Indian Economics)

10. தற்போதைய பொருளாதார போக்குகள் மற்றும் இந்தியாவில் உலக பொருளாதாரத்தின் தாக்கம் (Current Economic Trends and Impact of Global Economy on India)
11. தமிழ்நாட்டில் வளர்ச்சி நிர்வாகம் (Development Administration in Tamil Nadu)
12. இந்தியா மற்றும் தமிழ்நாட்டின் சமூகப் பிரச்சனைகள் (Social Issues in India and Tamil Nadu)

### சுற்றுச்சூழல் (Environment)

13. சுற்றுச்சூழல், உயிரினப் பன்மை மற்றும் பேரிடர் மேலாண்மை (Environment, Biodiversity and Disaster Management)

**தமிழ்நாட்டில் வளர்ச்சி நிர்வாகம்**

(Development Administration in Tamil Nadu)




# பொலிவு பெற்ற மொழிப்போர் தியாகிகள் நினைவிடம்

## முதல்வர் இன்று திறந்து வைக்கிறார்

**சென்னை, ஜன. 24:** மொழிப்போர் தியாகிகள் தாளமுத்து மற்றும் நடராசன் ஆகியோரின் புதுப்பிக்கப்பட்ட நினைவிடத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் சனிக்கிழமை (ஜன.25) திறந்து வைக்கிறார்.

இதுகுறித்து தமிழக அரசு சார்பில் வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பு:

பள்ளிகளில் கட்டாய ஹிந்திக்கு எதிரான மொழிப் போராட்டத்தில் நடராசன் உயிரிழந்தார். அதற்கடுத்த இரண்டு மாதங்களில் அதே போராட்டத்துக்காக சிறையில் அடைக்கப்பட்டார் தாளமுத்து. ஆனால், சிறைபட்ட மூன்று வாரங்களுக்குள் உயிரிழந்தார். மொழிப்போரின் வெற்றி வெளிச்சத்துக்கு ஒளிவிளக்குகளாய் நின்று உயிரிழந்த இவர்கள் இருவரின் நினைவாக, சென்னை மூலக்கொத்தளத்தில் நினைவிடம் அமைக்கப்பட்டுள்ளது. இதனை புதுப்பிக்கவும், ஜன. 25-ஆம் தேதி மொழிப்போர் தியாகிகள் தினத்தை தமிழ்மொழித் தியாகிகள் நினைவு நாள் என பெயரிட்டு அழைக்கவும் முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டார். அதன்படி, மூலக்கொத்தளத்தில் நினைவிடம்

புதுப்பிக்கப்பட்டுள்ளது. இதனை முதல்வர் மு.க.ஸ்டாலின் சனிக்கிழமை திறந்து வைக்கவுள்ளார்.

**பொதுக்கூட்டம்:** மொழிப்போர் தியாகிகள் தினத்தையொட்டி, திமுக சார்பில் பொதுக் கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சென்னை பல்லாவரத்தில் நடைபெறும் பொதுக் கூட்டத்தில் முதல்வரும், திமுக தலைவருமான மு.க.ஸ்டாலின் பேசவுள்ளார். இதேபோன்று பிற மாவட்டங்களில் நடைபெறும் பொதுக் கூட்டங்களிலும் திமுக மூத்த நிர்வாகிகள் பங்கேற்று பேசவுள்ளனர்.

# பேரூரில் கடல்நீரை குடிநீராக்கும் நிலையம்

## குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் ஆய்வு





பேரூரில் ரூ. 4,276.44 கோடி மதிப்பில் அமைக்கப்பட்டு வரும் கடல்நீரை குடிநீராக்கும் நிலைய கட்டுமானப் பணிகளை பார்வையிட்ட சென்னை குடிநீர் வாரிய மேலாண் இயக்குநர் டி.ஜி.வினய். உடன் தலைமைப் பொறியாளர் ஜ.சுகந்தி, மேற்பார்வைப் பொறியாளர் இ.சாந்தி.

**சென்னை, ஜன. 24:** பேரூரில் ரூ. 4,276.44 கோடி மதிப்பில் அமைக்கப்பட்டு வரும் கடல் நீரை குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையத்தின் கட்டுமானப் பணிகளை, சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டி.ஜி. வினய் நேரில் ஆய்வு மேற்கொண்டார்.

சென்னையின் வளர்ச்சிக்கேற்ப பொதுமக்களின் குடிநீர்த் தேவையை பூர்த்தி செய்யும் வகையில், கடல் நீரை குடிநீராக்கும் திட்டத்தின் கீழ், மீஞ்சூர் மற்றும் நெம்மேலியில் கடல்நீரை குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இதன் மூலம் தினமும் 350 மில்லியன் லிட்டர் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

அதன் தொடர்ச்சியாக, சென்னை கிழக்கு கடற்கரைச் சாலையிலுள்ள பேரூரில் ரூ. 4,276.44 கோடியில், தினமும் 400 மில்லியன் லிட்டர் உற்பத்தித் திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி முழுவீச்சில் நடைபெற்று வருகிறது.

**நடைபெறும் பணிகள்:** கடல் நீரை உறிஞ்சும் கட்டமைப்பு, செதிலடுக்கு தொட்டி, நடுநிலைப்படுத்தும் தொட்டி, நீர் சேகரிப்பு தொட்டி, சுத்திகரிக்கப்பட்ட நீர் சேகரிப்பு தொட்டி ஆகியவற்றை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. செதிலடுக்கு வடிகட்டி, கற்றழுத்தம் மூலம் எண்ணெய் மற்றும் கசடுகளை நீக்கும் தொட்டி உள்ளிட்டவை அமைப்பதற்கான அடித்தள பணிகளும் நடைபெற்று வருகின்றன. மேலும், இந்நிலையத்திலிருந்து போரூர் வரை 59 கி.மீ. நீளத்துக்கு குடிநீர் குழாய் பதிக்கப்படவுள்ளது.

இந்நிலையில், நடைபெற்று வரும் கட்டுமானப் பணிகளை சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டி.ஜி. வினய் வெள்ளிக்கிழமை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். அப்போது அவர், அனைத்துப் பணிகளையும் குறிப்பிட்ட கால அவகாசத்துக்குள் முடிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

இத்திட்டத்தின் மூலம், சென்னை மற்றும் தாம்பரம் மாநகராட்சிகளுக்குள்பட்ட பகுதிகளிலும், சென்னை மாநகராட்சிக்கு அருகில் உள்ள 20 ஊராட்சிப் பகுதிகளிலும் வசிக்கும் 22.67 லட்சம் பேர் பயனடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

# ‘ஈரப்பத நெல் மாதிரிகள் சென்னையில் இன்று ஆய்வு’



காட்டுமன்னார்கோவிலை அடுத்த முட்டம் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் நெல் ஈரப்பதம் குறித்து ஆய்வு மேற்கொண்ட மத்திய குழுவினர்.

**சிதம்பரம், ஜன.24:** கடலூர் மாவட்டத்துக்குள்பட்ட நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் நெல் ஈரப்பதம் குறித்து மத்திய குழுவினர் வெள்ளிக்கிழமை ஆய்வு மேற்கொண்டனர். இதுவரை அவர்கள் சேகரித்த 81 மாதிரிகள் சென்னை ஆய்வகங்களில் சனிக்கிழமை (ஜன.24) ஆய்வுக்குள்படுத்தப்படவுள்ளன.

கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் வட்டத்துக்குள்பட்ட முட்டம், ராஜேந்திரசோழகன், குப்பங்குழி ஆகிய பகுதிகளில் உள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் நெல் ஈரப்பதம் குறித்து மத்திய உணவு, நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சகத்தின் உதவி இயக்குநர்கள் நவீன், ப்ரீத்தி, தொழில்நுட்ப அலுவலர்கள் ராகுல்,

அபிஷேக் பாண்டே, இந்திய உணவுக் கழக தரக்கட்டுப்பாடு மேலாளர் பாஸ்கர் குமார் ஆகியோர் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மேலாண்மை இயக்குநர் ஆ.அண்ணாதுரை, கடலூர் மாவட்ட ஆட்சியர் சிபி ஆதித்யா செந்தில்குமார் முன்னிலையில் வெள்ளிக்கிழமை ஆய்வு மேற்கொண்டனர்.

**சென்னை ஆய்வகங்களில்...** தொடர்ந்து, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மேலாண்மை இயக்குநர் ஆ.அண்ணாதுரை கூறியதாவது:

இதுவரை 81 மாதிரிகள் மத்திய நிபுணர் குழுவினரால் எடுக்கப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த மாதிரிகளில் கூடுதல் திரிபுகள், ஈரப்பதம், தேவையற்ற கழிவுகளின் அளவு குறித்து சென்னையிலுள்ள ஆய்வகங்களில் சனிக்கிழமை (ஜன.24) ஆய்வு செய்து, மத்திய அரசுக்கு அறிக்கை வழங்கப்படும். அந்த அறிக்கையின் அடிப்படையில் நெல் கொள்முதல் ஈரப்பத அளவு நிர்ணயம் செய்யப்படும் என்றார்.

## குடிமைப் பணிகள் தேர்வு

# விண்ணப்பத்துடன் வயது, இடஒதுக்கீடுக்கான சான்றுகளை சமர்ப்பிப்பது இனி கட்டாயம்

**புது தில்லி, ஜன.24:** மத்திய பணியாளர் தேர்வு வாரியம் (யுபிஎஸ்சி) சார்பில் நடத்தப்படும் ஐஏஎஸ், ஐபிஎஸ் உள்ளிட்ட குடிமைப் பணிகளுக்கான தேர்வுக்கு விண்ணப்பிக்கும்போதே வயது, இடஒதுக்கீடு சலுகையை பெறுவதற்கான சான்றுகளை சமர்பிப்பது தற்போது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, முதல்நிலை, முதன்மை, நேர்முகத் தேர்வு என்று மூன்று நிலைகளைக் கொண்ட யுபிஎஸ்சி தேர்வில் முதல்நிலைத் தேர்வில் தகுதிபெற்ற பிறகு இந்தச் சான்றுகளுக்கான ஆவணங்களை விண்ணப்பதாரர்கள் பதிவேற்றம் செய்யும் வகையில் இருந்த நடைமுறை, மத்திய அரசு அண்மையில் அறிவிக்கை செய்த விதிகள் மூலம் மாற்றப்பட்டுள்ளது.

மகாராஷ்டிர மாநிலம் புணேயில் பயிற்சி ஐஏஎஸ் அதிகாரியாக பணியாற்றிவந்த பூஜா கேட்கர், யுபிஎஸ்சி தேர்வில் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பு மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான இடஒதுக்கீடைப் பெறும் வகையில் போலி ஆவணங்களைச் சமர்ப்பித்து தேர்ச்சி பெற்றது கண்டறியப்பட்ட நிலையில், இந்த நடவடிக்கையை மத்திய அரசு மேற்கொண்டுள்ளது.

‘குடிமைப் பணிகள் தேர்வு விதிகள் 2025’ என்ற ஜனவரி 22-ஆம் தேதியிட்ட இந்தப் புதிய விதியில், ‘குடிமைப் பணிகள் தேர்வுக்கு விண்ணப்பிக்கும் தேர்வர் இணைய வழியில் விண்ணப்பத்தைச் சமர்ப்பிப்பதோடு, பிறந்த தேதி, எஸ்.சி., எஸ்.டி., ஓபிசி, பொருளாதார ரீதியில் பின்தங்கியப் பிரிவினர் (இடபிள்யூஎஸ்), மாற்றுத்திறனாளிகள், முன்னாள் ராணுவத்தினர் உள்ளிட்ட சமூகப் பிரிவுக்கான சான்று, கல்வித் தகுதி உள்ளிட்டவற்றுக்கான சான்று ஆவணங்களையும் இணைய வழியில் பதிவேற்றம் செய்யவேண்டும். இந்தச் சான்றுகளை சமர்ப்பிக்கத் தவறும் தேர்வரின் விண்ணப்பம் ஏற்கப்படமாட்டாது’ என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

நிகழாண்டுக்கான குடிமைப் பணிகள் தேர்வு வரும் மே 25-ஆம் தேதி நடைபெற உள்ளது. இதில் சுமார் 979 காலியிடங்கள் நிரப்பப்பட உள்ளன.

இதில் அந்தந்த சமூகப் பிரிவுக்கு நிர்ணயிக்கப்பட்ட அளவில் இடஒதுக்கீடு அளிக்கப்படும். விருப்பமுள்ளவர்கள் http://upsconline.gov.in என்ற வலைதளத்தில் பிப்ரவரி 11-ஆம் தேதி மாலை 6 மணி வரை விண்ணப்பிக்கலாம்.

GOVERNMENT OF TAMIL NADU

# TEACHERS RECRUITMENT BOARD

Puratchi Thalaivar Dr.M.G.R Centenary Building, 3rd & 4th Floor, Perasiriyar Anbazhagan Kalvi Valagam, College Road, Nungambakkam, Chennai – 600 006. Website: https://www.trb.tn.gov.in

Notification No.01 / 2025 **SHORT NOTICE** Date:24.01.2025

Teachers Recruitment Board hosted the notification in its website (https://www.trb.tn.gov.in) on 24.01.2025 for appointment to the posts of **Associate Professor, Assistant Professor & Assistant Professor (Pre – Law) in Government Law Colleges - 2025** in the Tamil Nadu Legal Educational Service to be filled up by Direct Recruitment.

**IMPORTANT DATES: -**

| | | | |
|---|---|---|---|
| A. | Date of Notification | : | 24.01.2025 |
| B. | Date of commencement of receiving application through Online mode only | : | 31.01.2025 |
| C. | Last date for submission of filled in application through Online mode only | : | 03.03.2025 |
| D. | Date of Examination (OMR Based) (Tentative) | : | 11.05.2025 onwards |

For other information relating to educational qualification, age limit, applicability of rule of reservation, scheme of examination, payment of fee and other details, prospective candidates are advised to refer the detailed Notification uploaded in the Teachers Recruitment Board's Website: **https://www.trb.tn.gov.in.**

DIPR/71/DISPLAY/2025 **Secretary**

# அரசு சட்ட கல்லூரிகளுக்கு 132 உதவி பேராசிரியர் தேர்வு

## ஜன.31 முதல் விண்ணப்பிக்கலாம் என அறிவிப்பு

**சென்னை**

அரசு சட்டக் கல்லூரிகளுக்கு 132 இணை பேராசிரியர்கள் மற்றும் உதவி பேராசிரியர்கள் போட்டித் தேர்வு மூலம் தேர்வு செய்யப்பட உள்ளனர். இந்த தேர்வுக்கு ஜனவரி 31 முதல் ஆன்லைனில் விண்ணப்பிக் கலாம் என்று ஆசிரியர் தேர்வு வாரியம் அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக ஆசிரியர் தேர்வு வாரியத்தின் செயலாளர் நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:

அரசு சட்டக் கல்லூரிகளுக்கு 132 இணை பேராசிரியர், உதவி பேராசிரியர் மற்றும் உதவி பேராசிரியர் (சட்ட முன்படிப்பு) பணியிடங்களுக்கான அறிவிப்பு ஆசிரியர் தேர்வு வாரியத்தின் இணையதளத்தில் (www.trb.tn.gov.in) வெளியிடப்பட்டுள்ளது. பாடவாரியான காலிப் பணியிடங்கள், அவற்றுக்கான கல்வித்தகுதி, வயது வரம்பு, ஆன்லைன் விண்ணப்ப முறை உள்ளிட்ட அனைத்து விவரங்களும் அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இந்தப் பணிகளுக்கு விருப்பமுள்ள விண்ணப்பதாரர்கள் ஜனவரி 31-ம் தேதி முதல் மார்ச் 3-ம் தேதி வரை ஆன்லைனில் விண்ணப்பிக்க காலஅவகாசம் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# இஸ்ரேலுக்கான புதிய தூதராக ஜிதேந்தர் பால் சிங் நியமனம்

**புது தில்லி, ஜன.24:** இஸ்ரேல் நாட்டுக்கான புதிய இந்திய தூதராக ஜிதேந்தர் பால் வெள்ளிக்கிழமை நியமிக்கப்பட்டார்.

ஹமாஸ் - இஸ்ரேல் இடையே காஸாவில் போர்நிறுத்த உடன்பாடு அமலுக்கு வந்துள்ள சூழலில், இஸ்ரேலுக்கு புதிய தூதரை இந்தியா நியமித்துள்ளது.



ஜிதேந்தர் பால் சிங்

2002-ஆம் ஆண்டு பிரிவு இந்திய வெளியுறவு பணிகள் (ஐஎஃப்எஸ்) அதிகாரியான சிங், தற்போது வெளியுறவு அமைச்சகத்தில் முக்கியத்துவம் வாய்ந்த பாகிஸ்தான்-ஆப்கானிஸ்தான்-ஈரான் பிரிவு அதிகாரியாகப் பணியாற்றி வருகிறார்.

ஆப்கானிஸ்தானில் புதிதாக அமைந்த தலிபான் அரசுடனான இந்தியாவின் அணுகுமுறையைத் தெளிவுபடுத்தி செயல்படுத்தியதில் இவர் முக்கிய பங்கு வகித்தார்.

கடந்த ஆண்டு நவம்பரில் தலிபான் அரசின் பாதுகாப்பு அமைச்சர் (பொறுப்பு) முல்லா முகமது யாக்கூபை ஜிதேந்தர் பால் சிங் சந்தித்து இருதரப்பு உறவு குறித்து விரிவான ஆலோசனை மேற்கொண்டார். இந்த சந்திப்பு, ஆப்கன் வெளியுறவு அமைச்சர் அமிர் கான் முத்தாகியுடன் வெளியுறவு செயலர் விக்ரம் மிஸ்ரி பேச்சு நடத்துவதற்கு வழிவகுத்தது.

இந்தச் சூழலில், இந்தியாவின் இரண்டாவது பெரும் வர்த்தக கூட்டாளி நாடாகத் திகழும் இஸ்ரேலுக்கான தூதராக ஜிதேந்தர் பால் சிங் நியமிக்கப்பட்டுள்ளார். வைரம், பெட்ரோலிய பொருள்கள், ரசாயனங்கள் தவிர ராணுவ தளவாடங்களை இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யும் முக்கிய நாடுகளில் ஒன்றாக இஸ்ரேல் திகழ்கிறது.

இஸ்ரேலுக்கான இந்திய தூதராக அவர் விரைவில் பதவியேற்பார் என்று வெளியுறவு அமைச்சக செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**செய்திகளில் இடம் பெற்ற சிறந்த ஆளுமைகளும் / இடங்களும்**
(Eminent personalities and places in news )

### ராஜ்ஜியம் இல்லை, கிரீடம் இல்லை

# கேரளாவின் பழங்குடியின மன்னருக்கு குடியரசு தின விழாவில் பங்கேற்க அழைப்பு



**திருவனந்தபுரம்**

டெல்லியில் நடைபெறும் குடியரசு தின விழாவில் பங்கேற்க கேரளாவில் பழங்குடியினத்தைச் சேர்ந்த மன்னருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

கேரள மாநிலம் இடுக்கி மாவட்டம் காஞ்சியார் பஞ்சாயத்துக்கு உட்பட்டது கோழிமலை. இங்கு மன்னன் பழங்குடியின மக்கள் வாழ்கின்றனர். இவர்கள் பழங்காலத்தில் சோழர்களுக்கும் பாண்டியர்களுக்கும் ஏற்பட்ட போரின்போது தமிழ்நாட்டில் இருந்து கேரள பகுதிக்கு குடியேறியவர்கள். இந்த பழங்குடியின மக்களுக்கு ராஜா உண்டு. ஆனால் ராஜ்ஜியம் இல்லை. தலைநகர் உண்டு.

தற்போதைய மன்னன் பழங்குடியின மக்களின் ராஜாவாக ராமன் ராஜா மன்னன் இருக்கிறார். மன்னன் பழங்குடியின ராஜா ஆர்யன் ராஜா மன்னன் காலமானதை அடுத்து கடந்த 12 ஆண்டுகளுக்கு முன்னர் ராமன் முடிசூடினார். ஆனால், கிரீடம் இருக்காது. நாடு இருக்காது. கேரளாவில் பழங்குடியினத்தை சேர்ந்த ஒரே ராஜா இவர்தான். டெல்லியில் நாளை நடைபெறும் குடியரசு தின விழாவில் பங்கேற்க பழங்குடியினத் தலைவர்கள் பலருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அவர்களில் ராமன் ராஜா மன்னனும் ஒருவர்.

இவரது கிராமத்தில் உள்ள 3,000 மன்னன் பழங்குடியின குடும்பங்களுக்கு ராமன்தான் ராஜா. இந்த பழங்குடியினத்தவர்கள் விவசாயம், விவசாய தினக்கூலிகளாகவே இருக்கிறார்கள். இவர் கிரீடம் அணியாவிட்டால், பொது நிகழ்ச்சிகளில் தலைப்பாகை அணிந்து வருவார். ராமனுடைய வார்த்தைக்கு அவரது இன மக்கள் கட்டுப்பட்டு நடப்பார்கள். தங்களுடைய ராஜாவாகவே அவரை மதிக்கின்றனர். இவரது தலைநகரம் கோழிமலை கிராமம்தான். இந்நிலையில், ராமன் ராஜா மன்னன், இவரது மனைவி பினுமோல் ஆகியோர் நாளை டெல்லியில் நடைபெறும் குடியரசு தின விழாவில் பங்கேற்கின்றனர்.

தினமணி தினகரன் தினத்தந்தி

# 10 எதிர்க்கட்சி எம்.பி.க்கள் இடைநீக்கம்

## வக்ஃப் மசோதா கூட்டத்தில் அமளியால் நடவடிக்கை

**புது தில்லி, ஜன. 24:** வக்ஃப் சட்டத் திருத்த மசோதாவை ஆய்வு செய்வதற்காக வெள்ளிக்கிழமை கூடிய நாடாளுமன்ற கூட்டுக் குழுவின் 35-ஆவது கூட்டத்தில் கடும் அமளி ஏற்பட்டதால், 10 எதிர்க்கட்சி எம்.பி.க்கள் ஒரு நாள் இடைநீக்கம் செய்யப்பட்டனர்.

நாடாளுமன்ற கூட்டுக் குழுவின் தலைவர் ஜெகதாம்பிகா பால் மேற்கொண்ட இந்த நடவடிக்கை கேலிக்கூத்து என இடைநீக்கம் செய்யப்பட்ட எம்.பி.க்கள் விமர்சித்துள்ளனர். நேர்மையான முறையில் கூட்டத்தை நடத்த வேண்டும் என்று மக்களவைத் தலைவர் ஓம் பிர்லாவுக்கு அவர்கள் கடிதம் எழுதி உள்ளனர்.

இறைப் பணிக்காக முஸ்லிம்கள் வழங்கிய சொத்துகளை மாநில அரசுகளின் கட்டுப்பாட்டில் உள்ள வக்ஃப் வாரியங்கள் நிர்வகித்து வருகின்றன. இந்நிலையில், நாடு முழுவதும் உள்ள ஏராளமான வக்ஃப் வாரிய சொத்துகளை முறைப்படுத்தும் வகையில், வக்ஃப் வாரியத்தில் முஸ்லிம் பெண்கள் மற்றும் முஸ்லிம்கள் அல்லாத இரண்டு நபர்களை உறுப்பினர்களாக இடம்பெறச் செய்வது, வாரிய நிலங்களை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கட்டாயப் பதிவு செய்வது உள்ளிட்ட பல்வேறு திருத்தங்களுடன் வக்ஃப் சட்டத் திருத்த மசோதாவை மத்திய அரசு கடந்த ஆண்டு கொண்டு வந்தது.

எதிர்க்கட்சிகளின் கடும் எதிர்ப்பால் நாடாளுமன்ற கூட்டுக் குழு ஆய்வுக்கு மசோதா அனுப்பப்பட்டது.

பாஜக எம்.பி. ஜெகதாம்பிகா பால் தலைமையில் திமுக எம்.பி. ஆ.ராசா உள்பட 21 மக்களவை எம்.பி.க்கள் மற்றும் 10 மாநிலங்களவை எம்.பி.க்கள் இடம்பெற்ற கூட்டுக் குழு அமைக்கப்பட்டு, ஆய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

கடந்த அக்டோபர் மாதம் நடைபெற்ற கூட்டத்தில் ஏற்பட்ட கடும் வாக்குவாதத்தால் கோபமடைந்த திரிணமூல் காங்கிரஸ் எம்.பி. கல்யாண் பானர்ஜி தன் மீது பாட்டிலை வீசியதாக கூட்டுக் குழுத் தலைவர் ஜெகதாம்பிகா பால் புகார் தெரிவித்திருந்தார்.



தில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய இடைநீக்கம் செய்யப்பட்ட எதிர்க்கட்சி எம்.பி.க்கள்

இந்தக் குழு பல்வேறு மாநிலங்களுக்குச் சென்று கருத்துகளை கேட்டு வருகிறது.

**35-ஆவது கூட்டம்:** இந்நிலையில், தில்லியில் வெள்ளிக்கிழமை கூடிய 35-ஆவது கூட்டுக் குழுக் கூட்டத்தில் ஜம்மு-காஷ்மீர் யூனியன் பிரதேசத்தில் இருந்து காஷ்மீர் மதகுருவான மீர்வைஸ் உமர் ஃபரூக் தலைமையிலான குழு எதிர்ப்பு கருத்துகளைப் பதிவு செய்தது.

**பரஸ்பர குற்றச்சாட்டு:** அப்போது, விதிகளின்படி செயல்படாமல் மத்திய அரசுக்கு ஆதரவான நிலைப்பாட்டிலேயே நடந்துகொள்வதாக ஜெகதாம்பிகா பால் மீது குழுவில் இடம்பெற்றுள்ள எதிர்க்கட்சிகள் எம்.பி.க்கள் குற்றஞ்சாட்டினர்.

கூட்டத்தில் தொடர் அமளி ஏற்பட்டதால் திமுக எம்.பி.க்கள் ஆ.ராசா, முகமது அப்துல்லா, அனைத்திந்திய மஜ்லீஸ் கட்சித் தலைவர் அசாதுதீன் ஒவைசி, திரிணமூல் எம்.பி.க்கள் கல்யாண் பானர்ஜி, நதீம் உல் ஹக், காங்கிரஸ் எம்.பி.க்கள் நசீர் ஹுசைன், முகமது ஜாவீத், இம்ரான் மசூத், மொஹிபுல்லா (சமாஜவாதி), அரவிந்த் சாவந்த் (சிவசேனை -உத்தவ்) ஆகிய 10 எதிர்க்கட்சி எம்.பி.க்களை வெள்ளிக்கிழமை கூட்டத்திலிருந்து இடைநீக்கம் செய்து ஜெகதாம்பிகா பால் நடவடிக்கை மேற்கொண்டார்.

'கூட்டத்தை நடத்தவிடாமல் என்னை அவமதிக்கும் விதத்தில் திரிணமூல் எம்.பி. கல்யாண் பானர்ஜி அவதூறான கருத்துகளை தொடர்ந்து தெரிவித்தார். எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைத்து எல்லைகளையும் தாண்டிவிட்டதால் அவர்கள் இடைநீக்கம் செய்யப்பட்டனர். ஜனவரி 27-இல் நடக்கும் அடுத்த கூட்டத்தில் அவர்கள் பங்கேற்கலாம்' என்றார்.

**எதிர்க்கட்சி உறுப்பினர்கள் புகார்:** கேள்வி எழுப்பியதால் இடைநீக்கம் செய்யப்பட்டதாக திமுக உறுப்பினர் ஆ.ராசா கூறினார். அவர் மேலும் கூறுகையில், 'நாடாளுமன்ற கூட்டுக் குழுக் கூட்டத்தை அவசரகதியில் ஜன. 24, 25 ஆகிய தேதிகளில் நடத்தாமல் ஜன. 30, 31 ஆகிய தேதிகளுக்கு ஒத்திவைக்க வேண்டும் என கூட்டுக் குழுத் தலைவருக்கு ஜன. 22-ஆம் தேதி கடிதமும் எழுதினேன். அதற்குப் பதில் இல்லை.

வெள்ளிக்கிழமை நடைபெற்ற கூட்டத்தில் நாங்கள் அளித்துள்ள திருத்தங்களுக்கு ஒவ்வொரு ஷரத்தாக திருத்தங்களின் அடிப்படையில் விவாதிக்க வேண்டும் என்பதற்காக எங்கள் பணிகளை ஒதுக்கிவைத்துவிட்டு பங்கேற்க வந்தோம். ஆனால், ஜன. 27-இல் இது தொடர்பான விவாதம் நடைபெறும் என்று தகவல் தெரிவிக்கப்பட்டது.

இதுகுறித்து கேள்வி எழுப்பினோம். தில்லி தேர்தலை மனதில் வைத்து அறிக்கையை விரைவில் தாக்கல் செய்ய இருப்பதாக ஐயம் எழுப்பினோம். எங்களை இடைநீக்கம் செய்வதாகக் கூட்டுக் குழுத் தலைவர் அறிவித்தார்' என்றார் ஆ.ராசா.

மேலும், கூட்டுக் குழு தலைவர் தங்களை வீட்டுப் பணியாளர்களைப் போல் நடத்துவதாக கல்யாண் பானர்ஜி குற்றஞ்சாட்டினார்.

### ஜன. 29-இல் இறுதி அறிக்கை?

வகஃப் திருத்த மசோதா குறித்த பெறப்பட்ட கருத்துகள், ஆலோசனைக் கூட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட விவாதங்களின் அடிப்படையில் ஜன. 27-இல் கூடும் கூட்டத்தில் அறிக்கை மீது இறுதி விவாதம் நடைபெறும் என்றும், பின்னர் அந்த அறிக்கையை ஜன. 29-இல் நாடாளுமன்ற கூட்டுக் குழு இறுதி செய்யும் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முன்னதாக, இந்த அறிக்கை நடந்து முடிந்த குளிர்கால கூட்டத்தொடரில் தாக்கல் செய்யப்பட இருந்தது. பின்னர் பட்ஜெட் கூட்டத் தொடர் முடியும் வரையில் கூட்டுக் குழுவின் பதவிக் காலம் நீட்டிக்கப்பட்டது. நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடர் வரும் 31-ஆம் தேதி குடியரசுத் தலைவர் உரையுடன் தொடங்குகிறது.

# பெண் குழந்தைகள் குறித்து இந்தியா பெருமிதம்: பிரதமர் மோடி



**புதுதில்லி, ஜன. 24:** அனைத்துத் துறைகளிலும் தனது பெண் குழந்தைகள் சாதித்து வருவதைக் கண்டு இந்தியா பெருமிதம் கொள்வதாக பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

தேசிய பெண் குழந்தைகள் தினம் ஜன. 24-ஆம் தேதி (வெள்ளிக்கிழமை) கொண்டாடப்பட்டது. இதையொட்டி பிரதமர் மோடி எக்ஸ் வலைதளத்தில் வெளியிட்ட பதிவில் கூறியிருப்பதாவது:

தேசிய பெண் குழந்தைகள் தினமான இன்று (ஜன. 24) பெண் குழந்தைகளுக்கு அதிகாரமளிப்பதில் நாம் உறுதிபூண்டுள்ளோம். அவர்களுக்கு பல்வேறு வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பதிலும் உறுதியாக உள்ளோம். அனைத்துத் துறைகளிலும் தனது பெண் குழந்தைகள் சாதித்து வருவதைக் கண்டு இந்தியா பெருமிதம் கொள்கிறது. அவர்களது சாதனைகள் நமக்கு உத்வேகம் அளிக்கும்.

பெண் குழந்தைகளுக்கு எதிராக எந்தப் பாகுபாடும் காட்டப்படாமல் இருப்பதில் எனது அரசு உறுதியாக உள்ளது. பெண் குழந்தைகளுக்கு அதிகாரமளிப்பதில் பங்களிப்பை வழங்கும் கல்வி, தொழில்நுட்பம், திறன் மேம்பாடு மற்றும் சுகாதாரம் உள்ளிட்ட துறைகள் மீது மத்திய அரசு கவனம் செலுத்தி வருகிறது என்று தனது பதிவில் பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

# போலி தகவல்களை சமூக ஊடக நிறுவனங்கள் தடுக்கவில்லை

## தலைமைத் தேர்தல் ஆணையர்

**புது தில்லி, ஜன.24:** தேர்தல் நடைமுறைகள் குறித்து பகிரப்படும் போலியான தகவல்களை சமூக ஊடக நிறுவனங்கள் தடுக்கவில்லை என இந்திய தலைமைத் தேர்தல் ஆணையர் ராஜீவ் குமார் வெள்ளிக்கிழமை தெரிவித்தார்.



ராஜீவ் குமார்

மேலும், பகிரப்படும் தகவல்கள் போலியானது என கண்டறிந்து அதை முத்திரையிடுவதற்கு பதில் அதன் உண்மைத்தன்மையை தகவல் சரிபார்ப்புக் குழு மூலம் ஆராயும் பணியையும் தேர்தல் ஆணையத்திடம் சமூக வலைதளங்கள் விட்டுவிடுவதாகவும் அவர் தெரிவித்தார்.

தேர்தல் ஆணையங்களுக்கான சர்வதேச மாநாட்டின் நிறைவு நாளான வெள்ளிக்கிழமை ராஜீவ் குமார் பேசியதாவது: முதலில் நோய்களை பரப்பிவிட்டு பிறகு அதற்கான மருந்துகளை விற்பனை செய்வதுபோல் இங்கு அனைத்தும் வணிக நடைமுறைகள்போலவே செயல்படுத்தப்படுகிறது.

அந்தவகையில், சுதந்திரமான தேர்தல்கள் நடைபெறுவதில் கருத்துரிமையின் வெளிப்பாட்டுத் தளமாக உள்ள சமூக ஊடக நிறுவனங்களின் பங்கு இன்றியமையாதது. அதில் பகிரப்படும் போலி செய்திகள், தகவல்கள், வடிவங்கள், திசைதிருப்பும் வகையிலான பதிவுகள் ஒரு பிரச்னையின் உண்மைத்தன்மையை மறைக்கும் வகையில் இருக்கக்கூடாது. போலியான தகவல்கள் பகிரப்படுவதை வேகமாக கட்டுப்படுத்தாவிட்டால் அது நோய் போல் பரவ தொடங்கிவிடும். எனவே, கால தாமதம் ஆவதற்கு முன் போலி செய்திகள், தகவல்களை கண்டறிந்து அதன் பரவலை உடனடியாக தடுக்க சமூக ஊடக நிறுவனங்கள் முன்வர வேண்டும்.

இதற்கான நடைமுறைகளை வகுத்து அமல்படுத்த தேர்தல் ஆணையங்களும் முன்னெடுப்புகளை மேற்கொள்ள வேண்டும். தேர்தல் நடைமுறைகளிலும் செயற்கை நுண்ணறிவு (ஏஐ) தொழில்நுட்பங்களின் பயன்பாடு அதிகரிக்கவுள்ளது. இதனால் தேர்தல்களில் நடைபெறும் முறைகேடுகளை உடனடியாக கண்டறிந்து நடவடிக்கை எடுக்க முடியும்.

ஒருபுறம், நவீன தொழில்நுட்பங்கள் பல்வேறு நன்மைகளை அளித்தாலும் அதனால் ஏற்படக்கூடிய புதிய சவால்களையும் சமாளிப்பது நமது கடமையாகும் என்றார்.

# டிரம்ப் அரசாணைக்கு இடைக்காலத் தடை

**சியாட்டில், ஜன. 24:** அமெரிக்காவில் பிறந்ததன் அடிப்படையில் வழங்கப்படும் குடியுரிமையை ரத்து செய்து அந்த நாட்டு அதிபர் டொனால்ட் டிரம்ப் பிறப்பித்த அரசாணைக்கு சியாட்டில் மாவட்ட நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்தது.

இது குறித்து நீதிபதி ஜான் காஃப்னர் பிறப்பித்த உத்தரவில், 'பிறப்புசார் குடியுரிமையை ரத்து செய்து அதிபர் டொனால்ட் டிரம்ப் பிறப்பித்துள்ள அரசாணை, அரசமைப்புச் சட்டத்துக்கு விரோதமானது. எனவே, அந்த ஆணை அமல்படுத்தப்படுவது நிறுத்திவைக்கப்படுகிறது' என்றார்.

கடந்த ஆண்டு நடைபெற்ற அதிபர் தேர்தலில் ஜனநாயகக் கட்சி சார்பில் போட்டியிட்ட, இந்திய வம்சாவளியைச் சேர்ந்த அப்போதைய துணை அதிபர் கமலா ஹாரிஸைவிட பிரதிநிதிகள் வாக்குகளையும் மக்கள் வாக்குகளையும் அதிகம் பெற்று டொனால்ட் டிரம்ப் வெற்றி பெற்றார்.

அதையடுத்து, நாட்டின் 47-ஆவது அதிபராக கடந்த திங்கள்கிழமை அவர் பொறுப்பேற்றார். பதவியேற்ற முதல் நாளிலேயே, பல அதிரடியான அரசாணைகளை அவர் பிறப்பித்தார்.

பாரீஸ் பருவநிலை ஒப்பந்தத்திலிருந்து வெளியேறுவது, உலக சுகாதார அமைப்பிலிருந்து விலகுவது, சட்டவிரோதமாக குடியேறியவர்களை நாட்டை விட்டு வெளியேற்றுவது உள்ளிட்ட அந்த அரசாணைகளில், அமெரிக்காவில் பிறந்த எவருக்கும் அந்த நாட்டுக் குடியுரிமை அளிக்கப்படுவதை ரத்து செய்யும் ஆணையும் ஒன்று.



அரசாணைகளில் கையொப்பமிடும் டொனால்ட் டிரம்ப்.

அந்த ஆணையின் கீழ், வரும் பிப்ரவரி 19-ஆம் தேதிக்குப் பிறகு அமெரிக்காவில் பிறந்த குழந்தைகளின் தாய்க்கோ, தந்தைக்கோ அமெரிக்க குடியுமை அல்லது நிரந்தர குடியேற்ற உரிமை இல்லாமல் இருந்தால், அந்தக் குழந்தைக்கு குடியுரிமை வழங்கப்படாது.

அமெரிக்காவில் பிறந்த எவரும் குடியுரிமை பெறும் தகுதி படைத்தவர்கள் என்ற அரசியல் சாசனத்தின் 14-ஆவது விதி அந்தக் குழந்தைகளுக்குப் பொருந்தாது.

தற்காலிகமான சுற்றுலா நுழைவு இசைவு (விசா), கல்வி நுழைவு இசைவு பெற்று சட்டபூர்வமாக அமெரிக்கா வந்தவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளும் பிறப்புசார் குடியுரிமை பெறும் தகுதி அற்றவர்கள் என்று அந்த அரசாணை குறிப்பிடுகிறது.

அந்த ஆணையை எதிர்த்து, ஜனநாயகக் கட்சி ஆட்சி செய்யும் 22 மாகாண அரசுகள் பல்வேறு நீதிமன்றங்களில் வழக்கு தொடுத்துள்ளன.

அதில் வாஷிங்டன், அரிஸோனா, இல்லினாய்ஸ், ஆரகன் ஆகிய மாகாணங்கள் தாக்கல் செய்திருந்த மனுவை ஆய்வு செய்த சியாட்டில் மாவட்ட நீதிபதி ஜான் காஃப்னர், இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

அமெரிக்க உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்த பிறகும் கருப்பினத்தவருக்கு அடிப்படை குடியுரிமைகள் மறுக்கப்பட்டன. இதற்கு எதிராக 1868-ஆம் ஆண்டு நடைபெற்ற வழக்கில், அரசியல் சாசனத்தின் 14-ஆவது விதியின்படி நாட்டில் பிறந்த அனைவருக்கும் குடியுரிமை உள்ளது என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

அதன் பின்னர், சீன குடியேற்றவாசிகளுக்குப் பிறந்த ஒருவர் 1898-ஆம் ஆண்டு தொடர்ந்த வழக்கில், பெற்றோர் வேறு நாட்டிலிருந்து குடியேறியிருந்தாலும் அவர்களுக்கு அமெரிக்காவில் பிறந்த குழந்தைகள் நாட்டின் குடிமக்கள்தான் என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது. இதன் மூலம், அமெரிக்காவில் பிறந்த அனைத்து நிற, இனத்தினருக்கும் குடியுரிமை உறுதி செய்யப்பட்டது.

இந்த விதியைத் தவறாகப் பயன்படுத்தி, அமெரிக்காவில் குழந்தைகளைப் பெற்று அவர்களை நாட்டின் நிரந்தர குடிமக்களாக்குவதற்காகவே பல பெண்கள் வருவதாக டிரம்ப் குற்றஞ்சாட்டி வருகிறார்.

அதற்கு முடிவு கட்டும் நோக்கில் அவர் கொண்டுவந்துள்ள அரசாணையை அமல்படுத்துவதற்குத்தான் தற்போது இடைக்காலத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

# அமெரிக்கா: சிசேரியன் மூலம் பிரசவத்துக்கு இந்தியர்கள் அவசரம்!

## குடியுரிமை குறித்த டிரம்ப் உத்தரவு எதிரொலி

**வாஷிங்டன், ஜன. 24:** பிறப்புசார் குடியுரிமையை ரத்து செய்யும் அமெரிக்க அதிபர் டிரம்ப்பின் உத்தரவு இன்னும் ஒரு மாதத்தில் நடைமுறைக்கு வரும் நிலையில், 'சிசேரியன்' அறுவை சிகிச்சை மூலம் முன்கூட்டிய பிரசவத்துக்கு இந்தியர்கள் ஆர்வம் காட்டுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

127 ஆண்டுகள் பழமையான அரசமைப்புச் சட்டத் திருத்தத்தின் அடிப்படையில் அமெரிக்காவில் பிறக்கும் குழந்தைகளுக்கு அந்நாட்டு குடியுரிமை உத்தரவாதம் கிடைக்கிறது. இந்நிலையில், அமெரிக்காவின் 47-ஆவது அதிபராக கடந்த திங்கள்கிழமை பதவியேற்ற டொனால்ட் டிரம்ப், பிறப்புசார் குடியுரிமையை முடிவுக்குக் கொண்டு வரும் உத்தரவில் கையொப்பமிட்டார்.

இந்த உத்தரவு பிப்ரவரி 20-ஆம் தேதி நடைமுறைக்கு வந்த பிறகு, குறைந்தபட்சம் ஒரு பெற்றோராவது ஏற்கெனவே அமெரிக்க குடிமகனாக அல்லது நிரந்தர குடியுரிமை (கிரீன் கார்டு) வைத்திருப்பவராக இருந்தால் மட்டுமே அமெரிக்காவில் பிறக்கும் குழந்தைக்கு அந்நாட்டு குடியுரிமை கிடைக்கும்.

எனவே, கிரீன் கார்ட் பெறாமல் 'எச்1பி' அல்லது 'எல்1' நுழைவு இசைவில் (விசா) வசிக்கும் வெளிநாட்டு குடும்பங்களுக்கு டிரம்ப்பின் அதிரடி உத்தரவு பேரதிர்ச்சியாக அமைந்தது.

நிரந்தர குடியுரிமைக்கு விண்ணப்பித்து லட்சக்கணக்கான இந்தியர்கள் உள்பட வெளிநாட்டவர் காத்திருக்கின்றனர். அதேநேரம், தற்காலிக விசாவில் அமெரிக்காவிலேயே பல ஆண்டுகள் தங்கியிருப்பவர்கள் குழந்தைகளைக் பெற்றுக்கொண்டால், அக்குழந்தைகள் இயற்கையாகவே அமெரிக்க குடிமக்களாகிவிடுவர் என்ற நிலை உள்ளது. அதிபர் டிரம்ப்பின் புதிய உத்தரவு இந்த வாய்ப்பை முற்றிலுமாகத் தடுக்கிறது. புதிய உத்தரவு நடைமுறைக்கு வந்த பிறகு அமெரிக்காவில் பிறக்கும் வெளிநாட்டவர்களின் குழந்தைகள் 21 வயதை எட்டியதும் பெற்றோரின் சொந்த நாட்டுக்கு நாடுகடத்தப்படுவர் அல்லது அமெரிக்காவில் தங்குவதற்கான விசாவுக்கு அவர்கள் விண்ணப்பிக்க வேண்டியிருக்கும். ஆனால், அதற்கான காத்திருப்பும் நிராகரிப்புமே அதிகமாக இருக்கும்.



முழு குடும்பத்தையும் பாதிக்கும் இந்த விவகாரத்தில் பலர் தங்கள் குழந்தைகளுடன் சொந்த நாட்டுக்குத் திரும்புவதையே தேர்ந்தெடுப்பர்.

இதுகுறித்து டிரம்ப் கூறுகையில், 'நான் குடும்பங்களைப் பிரிக்க விரும்பவில்லை. ஆனால், முந்தைய நிர்வாகங்கள் செய்யாத ஒரே வழி மட்டுமே உள்ளது. அது அனைவரையும் அவரவர் நாட்டுக்கு திருப்பி அனுப்புவது தான்' என்றார்.

இந்த சிக்கலான உத்தரவைத் தவிர்க்க, அது நடைமுறைக்கு வரும் பிப்ரவரி 20-ஆம் தேதிக்கு முன்னதாக சிசேரியன் அறுவை சிகிச்சை மூலம் முன்கூட்டிய பிரசவத்துக்கு மருத்துவமனையை அணுகும் இந்திய கர்ப்பிணிகளின் எண்ணிக்கை திடீரென அதிகரித்துள்ளதாக அமெரிக்க மகப்பேறு மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.

இவர்களில் பெரும்பாலானவர்கள் கர்ப்பத்தின் எட்டாவது அல்லது ஒன்பதாவது மாதத்தில் இருக்கின்றனர்.

'ஏழு மாத கர்ப்பிணி தனது கணவருடன் முன்கூட்டிய பிரசவத்துக்குப் பதிவு செய்ய வந்ததாக நியூ ஜெர்சி மாகாணத்தைச் சேர்ந்த எஸ்.டி.ரோமா அதிர்ச்சி தகவலைக் கூறினார்.

'வளர்ச்சியடையாத நுரையீரல்கள், குறைவான பிறப்பு எடை, நரம்பியல் சிக்கல்கள் உள்பட குழந்தைகள் முன்கூட்டியே பிறப்பதால் ஏற்படும் பிரச்னைகள் குறித்து சுமார் இருபது பெற்றோர்களிடம் கடந்த இரண்டு நாள்களில் விளக்கியதாக டெக்சாஸ் மாகாணத்தில் உள்ள மகப்பேறு மற்றும் மகளிர் மருத்துவ நிபுணரான எஸ்.ஜி.முக்கலா தெரிவித்தார்.

அதிபர் டிரம்ப்பின் உத்தரவுக்கு எதிராக அமெரிக்காவில் சட்டப் போராட்டங்களும் தொடங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது. அரசமைப்புச் சட்டத்தில் திருத்தம் தேவைப்படும் இந்த உத்தரவை நடைமுறைப்படுத்துவதில் பல்வேறு சிக்கல்கள் இருப்பதாகவும் கூறப்படுகிறது.

**தற்போதைய பொருளாதார போக்குகள் மற்றும் இந்தியாவில் உலக பொருளாதாரத்தின் தாக்கம்**
(Current Economic Trends and Impact of Global Economy on India)

# நீதி ஆயோகின் நிதி வளக் குறியீடு: ஒடிஸா, கோவா, சத்தீஸ்கர், ஜார்க்கண்ட் முன்னிலை

**புது தில்லி, ஜன.24:** நீதி ஆயோக் வெள்ளிக்கிழமை வெளியிட்ட 'நிதி வளக் குறியீடு' தரவரிசைப் பட்டியலில் கனிம வளம் நிறைந்த ஒடிஸா, சத்தீஸ்கர், கோவா, ஜார்க்கண்ட் மாநிலங்கள் முன்னிலை வகிப்பது தெரியவந்துள்ளது.

நீதி ஆயோக், பல்வேறு காரணிகளின் அடிப்படையில் வளர்ச்சிக் குறியீடு உள்ளிட்ட மாநிலங்களுக்கான பல்வேறு தரவரிசைப் பட்டியலை வெளியிட்டு வருகிறது. அதுபோல, இந்தியாவின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி (ஜிடிபி), மக்கள்தொகை, மொத்த பொது செலவினம், வருவாய், ஒட்டுமொத்த நிதி நிலைத்தன்மை ஆகியவற்றுக்கு மாநிலங்களின் பங்களிப்பு அடிப்படையில் முதல் முறையாக நிதி வளக் குறியீட்டை (எஃப்ஹெச்ஐ 2025) வெள்ளிக்கிழமை வெளியிட்டது.

இந்தப் பட்டியலில் 67.8 புள்ளிகளுடன் நிதி வளம் நிறைந்த மாநிலங்களில் ஒடிஸா முதலிடம் வகிக்கிறது. இதனுடன் சத்தீஸ்கர், கோவா, ஜார்க்கண்ட், மகாராஷ்டிரம், உத்தர பிரதேசம், தெலங்கானா, மத்திய பிரதேசம், கர்நாடகம் ஆகியவை முன்னிலை மாநிலங்கள் பிரிவின் கீழ் பட்டியலிடப்பட்டுள்ளன.

தமிழகம், பிகார், ராஜஸ்தான், ஹரியாணா உள்ளிட்ட மாநிலங்கள் பங்களிப்பாளர்கள் என்ற பிரிவின் கீழ் பட்டியலிடப்பட்டுள்ளன. நிதி பற்றாக்குறை, கடன் நிலையற்ற தன்மை உள்ளிட்ட பாதிப்புகளை எதிர்கொண்டுவரும் பஞ்சாப், ஆந்திரம், மேற்கு வங்கம், கேரளம் ஆகிய மாநிலங்கள் விருப்ப நிலை என்ற மோசமான பிரிவின் கீழ் பட்டியலிடப்பட்டுள்ளன.

# உலக பொருளாதார அமைப்பின் ஆண்டு கூட்டம்: ரூ.20 லட்சம் கோடி முதலீட்டை ஈர்த்துள்ள இந்தியா

**டாவோஸ், ஜன.24:** ஸ்விட்சர்லாந்தின் டாவோஸ் நகரில் வெள்ளிக்கிழமை நிறைவடைந்த உலக பொருளாதார அமைப்பின் ஆண்டுக் கூட்டத்தில் ரூ.20 லட்சம் கோடிக்கும் அதிகமான முதலீடுகளை இந்தியா ஈர்த்திருப்பது, இந்தியா மீதான உலக தலைவர்களின் நம்பிக்கையை வெளிப்படுத்துவதாக தலைவர்கள் தெரிவித்தனர்.

மத்திய ரயில்வே, தகவல் தொடர்பு, மின்னணுவியல் மற்றும் தகவல்தொழில்நுட்பத் துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தலைமையில், 5 மத்திய அமைச்சர்கள், 3 மாநில முதல்வர்கள், உயர் அதிகாரிகளை உள்ளடக்கிய மிகப் பெரிய இந்திய அதிகாரிகள் குழு இந்தக் கூட்டத்தில் பங்கேற்றது. இதில் பங்கேற்ற உலகின் பல முன்னணி நிறுவனங்கள் இந்திய நிறுவனங்களுடன் கூட்டுறவை ஏற்படுத்தவும், இந்தியாவில் மிகப்பெரிய அளவில் முதலீடுகளை மேற்கொள்ளவும் முன்வந்துள்ளன.

குறிப்பாக, இந்த கூட்டத்தில் மகாராஷ்டிர முதல்வர் தேவேந்திர ஃபட்னவீஸ் தலைமையிலான அந்த மாநிலக் குழு ரூ.15.70 லட்சம் கோடி மதிப்பிலான 61 புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையொப்பமிட்டுள்ளது. இதன் மூலம் 16 லட்சம் வேலைவாய்ப்புகள் உருவாக வாய்ப்பு உருவாகியுள்ளது.

தெலங்கானா முதல்வர் ரேவந்த் ரெட்டி தலைமையிலான அதிகாரிகள் குழு ரூ.1.79 லட்சம் கோடி மதிப்பிலான 20 புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையொப்பமிட்டுள்ளது. இது 50,000 புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதுபோல, கேரளம், உத்தர பிரதேசம் மாநிலங்களும் பல ஆயிரம் கோடி மதிப்பிலான ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளன.

உலகபொருளாதார அமைப்பின் அடுத்த ஆண்டுக் கூட்டம் டாவோஸில் 2026-ஆம் ஆண்டு ஜனவரி 19 முதல் 23 வரை நடைபெற உள்ளது.

# கோதையாறு வனப் பகுதியில் விடப்பட்ட 'புல்லட் ராஜா' யானை

**அம்பாசமுத்திரம், ஜன. 24:** நீலகிரி மாவட்டம், பந்தலூர் பகுதியில் கடந்த மாதம் குடியிருப்புப் பகுதிகளில் சுற்றித் திரிந்த 'புல்லட் ராஜா' என்ற காட்டு யானை, வெள்ளிக்கிழமை கோதையாறு வனப் பகுதியில் கொண்டு விடப்பட்டது.

நீலகிரி மாவட்டம், பந்தலூரை அடுத்த சேரங்கோடு மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் கடந்த மாதம் 40-க்கும் மேற்பட்ட குடியிருப்புகளை சேதப்படுத்தி, அரிசி, பருப்பு உள்ளிட்ட உணவுப் பொருள்கள், பயிர்கள் உள்ளிட்டவற்றைச் சேதப்படுத்தியது புல்லட் ராஜா யானை. இந்த யானையை பிடிக்கக் கோரி, அந்தப் பகுதி மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதையடுத்து, வனத் துறையினர், மருத்துவர் ராஜேஷ்குமார் மற்றும் குழுவினர், கும்கி யானைகள் உதவியுடன் யானையின் நடமாட்டத்தை கண்காணித்து மயக்கஊசிசெலுத்தி பிடித்து கோயம்புத்தூர் மாவட்டம் பொள்ளாச்சி டாப்சிலிப் யானைகள் முகாமுக்கு கொண்டு வந்து பராமரித்து வந்தனர்.



மணிமுத்தாறு வனச் சோதனைச் சாவடியிலிருந்து கோதையாறு கொண்டு செல்லப்பட்ட புல்லட் ராஜா யானை.

இந்நிலையில், திருநெல்வேலி மாவட்டம், களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகம், அம்பாசமுத்திரம் கோட்டம், கோதையாறு வனப் பகுதியில் புல்லட் ராஜா யானையை விடுவதற்காக வியாழக்கிழமை லாரியில் கொண்டு வந்தனர்.

மணிமுத்தாறு வனச் சோதனைச் சாவடிக்கு வந்த யானையை, களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பக துணை இயக்குநர்கள் அம்பாசமுத்திரம் இளையராஜா, களக்காடு ரமேஷ்வரன்ஆகியோர் தலைமையில் கோதையாறு வனப் பகுதிக்கு கொண்டு சென்றனர். அங்கு அரிசிக் கொம்பன் விடப்பட்ட இடமான முத்துக்குளி வயல் பகுதியில் புல்லட் ராஜா யானை வெள்ளிக்கிழமை அதிகாலை விடப்பட்டது.

கோதையாறு வனப் பகுதியில் குடியிருப்புப் பகுதியில் அட்டகாசத்தில் ஈடுபட்ட அரிசிக் கொம்பன், புல்லட் ராஜா உள்ளிட்ட யானைகளை அடுத்தடுத்து கொண்டு வந்து விடுவதால் மலையடிவார மக்கள் அச்சத்தில் உள்ளனர்.

**இந்தியாவின் வளர்ச்சியில் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் பங்கு மற்றும் தாக்கம்**

(Role and Impact of Science and Technology in the Development of India)

# அளவுக்குள் அடங்கட்டும் அறிதிறன்பேசி பயன்பாடு



முனைவர் என். மாதவன்

பிரான்ஸ் அரசாங்கம் அந்த நாட்டின் அனைத்துப் பள்ளிகளிலும் அறிதிறன் பேசி (ஸ்மார்ட் போன்) பயன்படுத்தப்படுவதை 2025 ஜனவரி முதல் தடைசெய்து சட்டம் நிறைவேற்றி உள்ளது. இதனைத் தொடர்ந்து ஆஸ்திரேலிய அரசும் தடை செய்ய முயற்சிப்பதாக தகவல்கள் வருகின்றன. இத்தாலி, ஜெர்மனி போன்ற நாடுகளும் அறிதிறன் பேசியின் பாதக விளைவுகளை உணரத் தொடங்கியுள்ளன.

பிரான்ஸ் அரசின் முனைப்பான இந்த செயல்பாடு மிகவும் வரவேற்கத்தக்கது. கடந்த பல ஆண்டுகளாக பல்வேறு முயற்சிகளைச் செய்து, சில முன்னோட்டத்திட்டங்களைச் செயல்படுத்தி இந்த முடிவுக்கு வந்துள்ளனர். அதைக் கொஞ்சம் விரிவாகப் பார்ப்போம்.

மேற்கத்திய நாடுகள் மற்றும் அமெரிக்கா போன்ற வளர்ந்த நாடுகள் கரோனா பெருந்தொற்றுக்கு முன்பிருந்தே அறிவியலையும் தொழில்நுட்பத்தையும் வகுப்பறைகளில் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றன. கரோனா பெருந்தொற்றுக் காலத்தில் அறிதிறன்பேசிகளின் பயன்பாடு மேலும் அதிகரிக்கத் தொடங்கியது. கரோனா பெருந்தொற்று காலத்தில் ஊரடங்கு நேரத்தில் பள்ளிக்கு வராமல் வீட்டில் இருந்தபடியே மாணவர்கள் அறிவியல் தொழில்நுட்பத்தின் துணையுடன் கல்வி கற்றனர். மேற்கத்திய நாடுகளில் சுமார் 60% மாணவர்கள் இணைய வசதி பெற்றிருப்பதாக யுனிசெஃப் நிறுவனத்தின் புள்ளிவிவரம் கூறுகிறது.

ஆனால் இன்றைக்கு அதன் விளைவுகள் விரும்பத்தக்கவையாக இல்லை. இதனால் மாணவர்கள் அறிதிறன்பேசிகளைப் பள்ளி நேரத்தில் கையில் வைத்திருக்கவே கூடாது என்று தடை செய்து பிரான்ஸ் சட்டம் இயற்றியுள்ளது.

இதற்காக பிரான்ஸ் செய்துள்ள சில முன்னோட்டத் திட்டங்களைப் பற்றியும் கொஞ்சம் பார்ப்போம். 2010 - வாக்கிலேயே அறிதிறன்பேசியின் ஆபத்தை உணர்ந்து வகுப்பறைகளில் அதன் பயன்பாட்டைத் தடைசெய்தனர். 2017 - களில் பிரான்ஸ் கல்வி அமைச்சர் 15 வயதுக்கும் குறைவான வயதுடையோர் அறிதிறன்பேசியைப் பயன்படுத்துவதைத் தடைசெய்தார். 2018- இல் தொடக்க மற்றும் இடைநிலைப் பள்ளிகளில் அறிதிறன்பேசி பயன்பாட்டைத் தடை செய்து சட்டம் நிறைவேற்றப்பட்டது. ஆனால் இவற்றால் பெருமளவிலான நல்ல விளைவுகள் ஏற்படவில்லை. மாணவர்கள் மத்தியில் சமூக ஊடகங்களின் மீதான மோகம் அதிகரித்தவாறே இருந்தது. ஆசிரியர்கள் கவனக் குறைவாக இருந்தபோது மாணவர்கள் அறிதிறன்பேசியைப் பயன்படுத்தவே செய்தனர். இதனால் மாணவர்கள் ஒருவரையொருவர் கேலி செய்தல், பதற்றமாக இருத்தல், வகுப்பறையில் கவனமின்றி இருத்தல் போன்ற பல சம்பவங்களும் அரங்கேறியிருக்கின்றன.

இவை அனைத்தையும் கருத்தில் கொண்டு அதிபர் இமானுவேல்மேக்ரான் ஒரு குழுவை நியமித்தார். அந்தக் குழுவானது, சுமார்140 பக்க அறிக்கையைச் சமர்ப்பித்தது. அதன்படி அறிதிறன்பேசியின் அளவுக்கதிகமான பயன்பாடானது மாணவர்களின் உடல்நிலையில், வளர்ச்சியில் பல்வேறு விரும்பத்தகாத விளைவுகளை ஏற்படுத்தியுள்ளதைப் பகிர்ந்துள்ளது. மாணவர்களிடையே தூக்க இழப்பு ஏற்பட்டுள்ளது. அவர்களிடையே பதற்றம் அதிகரித்திருக்கிறது. எனவே அளவுக்கதிகமான அறிதிறன்பேசி பயன்பாடானது மாணவர்களுக்கு மட்டுமல்ல, சமுதாயத்துக்கும் நாகரிகத்திற்குமே பாதிப்பானது எனப் பரிந்துரைத்துள்ளது.

இந்த பரிந்துரைகளை அடிப்படையாகக் கொண்டு ஒரு முன்னோட்டத் திட்டமானது அமல்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி, மாணவர்கள் பள்ளிக்குள் நுழையும்போதே அவர்களது அறிதிறன் பேசிகளைப் பெற்று ஒரு பாதுகாப்புப் பெட்டகத்தில் வைக்கின்றனர். அதனை பள்ளி நேரம் முடிந்த பின்னர் அவர்களிடம் அளிக்கின்றனர். இந்த நடைமுறை 2024 ஆகஸ்ட் முதல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சுமார் 200 பள்ளிகளில் 50 ஆயிரம் மாணவர்கள் இந்த முன்னோட்டத் திட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். பிரான்ஸ் ஆசிரியர்கள் மத்தியில் இது வரவேற்பைப் பெற்று வருகிறது. பலரும் மகிழ்கின்றனர். ஆனால் அதே நேரம் இவ்வாறு அறிதிறன்பேசிகளைப் பெறுவது, பாதுகாப்பது, திரும்ப அளிப்பது போன்றவற்றுக்கு தனியாக ஊழியர்களை நியமிக்க வேண்டும் என்ற கோரிக்கையும் வலுத்து வருகிறது. இந்தத் திட்டத்தை இந்த ஆண்டு முதல் நாடு முழுமைக்கும் பிரான்ஸ் அமல்படுத்த உள்ளது.

'2015 கணினியும் மனித நடவடிக்கைகளும்' என்ற இதழ் கல்லூரி மாணவர்களிடையே நிகழ்த்தப்பட்ட ஆய்வினை அடிப்படையாகக் கொண்டு ஒரு செய்தியினை வெளியிட்டுள்ளது. அதன்படி அறிதிறன்பேசி பயன்பாட்டினால் மாணவர்கள் எடுக்கும் மதிப்பெண்கள் குறைந்துள்ளன என்கிறது. இதுபோலவே பல்வேறு நாடுகளில் நிகழ்த்தப்பட்ட ஆய்வுகளும், ஆசிரியர்கள், பேராசிரியர்கள் கற்பித்தலை மேற்கொள்ளும்போது, எல்லாம் இணையத்தில் கிடைக்கும் என்ற எண்ணம் கவனக் குறைவுக்கு இட்டுச் செல்வதாகக் கூறுகின்றன. ஆசிரியர்கள், மாணவர்கள் மத்தியில் ஒருவிதமான இறுக்கமான உறவு தென்படுவதை அன்றாட நடவடிக்கைகளில் காண இயல்கிறது. எல்லாவற்றையும் கேலியாகவும் கிண்டலாகவும் எடுத்துக்கொள்ளும் மனநிலை அதிகரித்து வருவதையும் பார்க்க முடிகிறது.

தற்போது நமது இந்தியச் சூழலிலும் இதனைக் கொஞ்சம் பொருத்திப் பார்ப்போம். கரோனா பெருந்தொற்று நேரம், பல்வேறு நன்மை, தீமைகளை நமக்குள் கொண்டு வந்தது. மாணவர்களின் கல்வியானது தொடர வேண்டும் என்ற கவலை பலருக்கும் இருந்தது. எது எப்படியோ மாணவர்கள் கல்வி பெறட்டும் என்ற கட்டாயத்தின் பேரிலும், விருப்பத்தின் பேரிலும் அறிதிறன்பேசியை மாணவர்களிடம் கொடுத்தோம். அவர்கள் கல்வி பெற்றார்களோ, இல்லையோ பல விதமான சமூக ஊடகத் தொடர்புகளைப் பெற்றனர். அதன் மூலம் அவர்கள் அரங்கேற்றி வரும் லீலைகளுக்கு அளவில்லை. பள்ளி நேரங்களிலேயே பல்வேறு விரும்பத்தகாத செயல்பாடுகளில் ஈடுபட்டு அதனைக் காணொலியாகப் பகிர்கின்றனர். இதனால் பலரும் பல்வேறு இன்னல்களுக்கு உள்ளாக நேரிடுகிறது.

அன்றைக்கு அவர்கள் கைகளில் அளிக்கப்பட்ட அறிதிறன்பேசியை இன்று திரும்பவும் வாங்குவது இயலாத காரியமாகிவிட்டது. அந்த அளவுக்கு அவர்கள் அறிதிறன் பேசிக்கும், அதன் மூலம் இணையத் தொடர்புகளுக்கும் அடிமையாகிவிட்டனர்.

ஏழைப் பெற்றோர்களின் பிள்ளைகளான மாணவர்களுக்கு அவர்களுக்கென்று அறிதிறன்பேசிகள் இல்லை. இருந்தாலும் யாரோ ஒரிருவர் கொண்டு வருவதை வைத்துக் கொண்டே மாணவர்கள் செய்யும் அடாவடிகளுக்கு அளவில்லை. மேலை நாடுகள் போன்று அனைவரும் அறிதிறன் பேசி வைத்திருக்கும் நிலை வருமானால், நமது நிலை மேலும் கவலைக்குரியதாகும்.

மாணவர்கள் நிலையே இவ்வாறு இருக்கிறதென்றால், அவர்களுக்கு முன் மாதிரியாக இருக்க வேண்டிய பெரியவர்கள் நிலைமையும் கவலைக்குரியதாகவே உள்ளது. வியாபாரம், தொழில் உள்ளிட்ட தேவைகளுக்காக அறிதிறன்பேசியை முறையாகப் பயனபடுத்துவோரைப் பற்றி இங்கே நாம் பேசவில்லை.

பெரும்பாலானோர் பயன்படுத்தும்விதத்தினைப் பற்றி கொஞ்சம் பார்ப்போம். பலரும் அவர்கள் எங்கெல்லாம் பயணிக்கின்றனரோ அங்கெல்லாம் பெரும்பாலும் தங்களது அறிதிறன்பேசி உடன்தான் பயணிக்கின்றனர். பயணிக்கும் நேரங்களில் அது எந்த நேரமானாலும், எந்த வாகனமானாலும் பேசிக்கொண்டே செல்வது வாடிக்கையாகிவிட்டது. இதனால் விபத்துகள் ஏற்படுகின்றன.

அறிதிறன்பேசி பயன்பாட்டின் நீட்சியாக, பெற்றோர்கள் குழந்தைகளுக்கு சோறூட்டுவதில் தொடங்கி தூங்க வைப்பது வரை அறிதிறன்பேசியைப் பயன்படுத்துகின்றனர்.

அறிதிறன்பேசியைப் பயன்படுத்துவோர் மணிக்கணக்கில் எந்தவித அசைவுமில்லாமல் ஒரே இடத்தில் அமர்ந்து கொண்டிருக்கின்றனர். இதனால் உடலியல் செயல்பாடுகள் வெகுவாகக் குறைகின்றன. இதனால் உடல் எடை அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. என்றாலும் நல்ல கருத்துகளை முறைப்படியிலான இடைவெளியில் பகிரும் ஒழுங்குடன் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவோரும் இல்லாமல் இல்லை

மேலை நாடுகளிலிருந்து நாம் பல நேரங்களில் பல நல்ல விஷயங்களைக் கற்றுக் கொண்டு வருகிறோம். அறிதிறன்பேசி பயன்பாட்டிலும் அவர்களுடைய அனுபவங்களை உள்வாங்கி நமக்கான நல்ல முன்மாதிரிகளை ஏற்படுத்த வேண்டும். முதலாவதாக, நமது வீட்டிலுள்ள குழந்தைகள் அறிதிறன்பேசிகளைப் பயன்படுத்தும் வழிவகைகளைத் திட்டமிட வேண்டும். அதற்கு முன் மாதிரியாக நாம் சில நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். குடும்பநேரம் என்ற ஒன்றை உருவாக்கிக் கொண்டு அந்த நேரத்தில் அறிதிறன்பேசியை தள்ளிவைத்துவிட்டு, அனைவரும் கூட்டாக உணவு உண்பது, பேசுவது, விளையாடுவது, நடைப்பயிற்சி செய்வது போன்ற செயல்பாடுகளில் ஈடுபடலாம். புத்தகவாசிப்பு, வாசித்ததைப் பகிர்வது போன்றவற்றிலும் நிச்சயம் ஈடுபடலாம். எங்கெங்கோ இருப்பவர்களிடம் நட்பு கொண்டு உறவாடுவதில் தவறில்லை. அது தேவையும்கூட. ஆனால் எங்கெங்கோ இருப்பவர்களின் இணைய இணைப்பைவிட, உடனிருப்போரின் உயிரோட்டமான பிணைப்பே ஆபத்துக்கு உதவும்; ஆறுதல் அளிக்கும் என்பதை மறவாமல் இருப்போம். இப்படி நாம் முன்மாதிரியாக இருப்பது, நமது பிள்ளைகளுக்கு அறிவுரை சொல்லும் நமது தகுதியை அதிகரிக்கும்.

**குடும்பநேரம் என்ற ஒன்றை உருவாக்கிக் கொண்டு அந்த நேரத்தில் அறிதிறன்பேசியை தள்ளிவைத்துவிட்டு, அனைவரும் கூட்டாக உணவு உண்பது, பேசுவது, ஏதாவது விளையாடுவது, நடைப்பயிற்சி செய்வது போன்ற செயல்பாடுகளில் ஈடுபடலாம்.**

கட்டுரையாளர்:
**மாநிலத் துணைத்தலைவர்,**
**தமிழ்நாடு அறிவியல் இயக்கம்.**

# ஜன.29-இல் விண்ணில் பாய்கிறது ஜிஎஸ்எல்வி- எஃப் 15 ராக்கெட்!

**சென்னை, ஜன. 24:** போக்குவரத்து மற்றும் பாதுகாப்பு வழிகாட்டி செயற்கைக் கோளுடன் ஜிஎஸ்எல்வி-எஃப் 15 ராக்கெட், ஆந்திர மாநிலம், ஸ்ரீஹரிகோட்டாவிலிருந்து வரும் 29-ஆம் தேதி விண்ணில் ஏவப்படுகிறது.

இந்தியாவில் தரைவழி, கடல்வழி மற்றும் வான்வழி போக்குவரத்துக்கும், பாதுகாப்பு பயன்பாட்டுக்கு உதவும் இந்திய மண்டல வழிகாட்டுதல் செயற்கைக்கோள் அமைப்பை (ஐஆர்என்எஸ்எஸ்) உருவாக்க இஸ்ரோ திட்டமிட்டது.

இதற்காக ஐஆர்என்எஸ்எஸ் வரிசையில் 2013 முதல் 2018-ஆம் ஆண்டு வரையான கால கட்டங்களில் 8 வழிகாட்டுதல் செயற்கைக் கோள்கள் வெற்றிகரமாக விண்ணில் நிலைநிறுத்தப்பட்டன.

இதன் மூலம் இந்தியாவுக்கென பிரத்யேக வழிகாட்டி நாவிக் தொழில்நுட்பம் செயல்பாட்டில் உள்ளது. நாட்டின் கண்காணிப்பு பணிகள் அதன் வாயிலாகவே மேற்கொள்ளப்படுகின்றன.

இந்நிலையில், ஐஆர்என் எஸ்எஸ் திட்டத்தில் தற்போதைய அவசியத்துக்கேற்ப மேம்படுத்தப்பட்ட செயற்கைக்கோள்களை விண்ணில் நிலைநிறுத்த இஸ்ரோ திட்டமிட்டது.

அதன்படி இதற்கு முன்பு அனுப்பப்பட்ட ஐஆர்என் எஸ்எஸ் 1ஜி செயற்கைக் கோளுக்கு மாற்றாக என்விஎஸ் 01 செயற்கைக் கோளை கடந்த 2023 மே 29-இல் விண்ணில் நிலைநிறுத்தியது இஸ்ரோ. தற்போது அதற்கு மாற்றாக அதிநவீன என்விஎஸ் - 02 செயற்கைக் கோளை இஸ்ரோ வடிவமைத்துள்ளது.

இந்த செயற்கைக்கோள் ஜிஎஸ்எல்வி - எஃப் 15 ராக்கெட் மூலமாக ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவன் இரண்டாவது ஏவுதளத்திலிருந்து ஜன. 29-ஆம் தேதி காலை 6.23 மணிக்கு ஏவப்படவுள்ளது.

இதற்கான இறுதிக்கட்டப் பணிகளில் இஸ்ரோ விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர். என்விஎஸ் - 02 செயற்கைக்கோள் 2,250 கிலோ எடை உடையது. இதன் ஆயுட்காலம் 10 ஆண்டுகள்.

இதில் எல் 1, எல் 5, மற்றும் எஸ் பேண்ட் டிரான்ஸ்பாண்டர்கள், உள்நாட்டு தொழில்நுட்பத்தில் தயாரான அணுக் கடிகாரம் உள்பட பல்வேறு மேம்படுத்தப்பட்ட அதிநவீன தொழில்நுட்ப கருவிகள் இடம்பெற்றுள்ளன.

இது மற்ற செயற்கைக் கோள்களுடன் சேர்ந்து தரை, கடல், வான்வெளி போக்குவரத்தை கண்காணிக்கும். பேரிடர் காலங்களில் துல்லியத் தகவல்களை தெரிவிக்கும் என்று இஸ்ரோ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

**விளையாட்டு**
(Sports)

# விளையாட்டு மேம்படுத்தப்படுமா?

பொ. ஜெயச்சந்திரன்

தமிழர் வாழ்வில், விளையாட்டு என்பது நீண்டகாலமாக இருக்கிறது.

தொல்காப்பியர் உவகை என்னும் மெய்ப்பாடு தோன்றுவதற்குரிய நான்கு வகை களன்களில் ஒன்றாக விளையாட்டை 'செல்வம் புலன் புணர்வு விளையாட்டென்று அல்லல் நீத்த உவகை' என்று குறிப்பிடுகிறார்.

விளையாட்டில் பல நிலைகளும், வகைகளும் உள்ளன. முதலில் விளையாட்டு என்பது ஒருவர் சார்ந்தது அல்ல. இருவரோ அல்லது அதற்கு மேற்பட்டவர்களோ இணைந்து களம் இறங்குவது. 'கெடவரல் பண்ணை ஆயிரண்டும் விளையாட்டு' என்கிறது தொல்காப்பியம்.

சங்க காலத்தில் பல்வேறு விளையாட்டுகள் நடைபெற்றுவந்த நிலையில் நற்றிணையில் ஓரை விளையாட்டு, வட்டாடுதல், ஊசலாட்டம், பந்தாட்டம், சிற்றில், கழங்காடுதல், வண்டலிழைத்தல், புனல் நீராடுதல், கடற்கரையில் விளையாடுதல் போன்ற விளையாட்டுகளைப் பற்றி புலவர்கள் கூறியுள்ளனர்.

'தெருவில் நாம் ஆடும் மணற் சிற்றில் காலின் சிதையா அடைச்சிய கோதை பரிந்து வரிப்பந்து கொண்டு ஓடி நோதக்க செய்யும் சிறுபட்டி' என்ற பாடல் வரிகள், தெருவில் சிறுமியர் கட்டி விளையாடும் மணல் வீட்டைச் சிறுவர்கள் காலால் உதைத்தும், அச்சிறுமியர்களின் பூமாலையை இழுத்தும், அறுத்தும் பந்தை பறித்துக் கொண்டு ஓடியும் வருந்தச் செய்ததை விளக்குகின்றன.

'சுனைப்பூக் குற்றுத் தொடலை தைஇப் புனக்கிளி படியும் பூங்கட் பேதை' கவலையில் தேங்காமல், மகிழ்ச்சி மண்டிய முகத்தினராய், துள்ளலும், எழுச்சியும் நிரம்பிய வாழ்வினராய் மகளிர் சிறு சிறு விளையாட்டுகளில் ஈடுபட்டனர் என்பது சங்க இலக்கியங்களின் பல பாடல்களால் நன்கு புலனாகிறது.

சங்கத் தமிழர், குழுநிலை விளையாட்டுகளையும், மைதானங்களின் நடுவே இடம் பெற்ற வீர விளையாட்டுகளையும் சமூகச் செயற்பாடுகளாகவே கருதினர். அரசுகள், ஊர் மன்றங்கள் ஆகியவை விளையாட்டுகளை நடத்தி வென்றோருக்கு மதிப்பளித்தன. தெரு மறைவிடம், செய்குன்று, இளமரக்கா என்னும் பூங்கா பந்தல், படிக்கரை நீர்நிலை, நெடுமணல் பரப்பு, காவற்காடு, கனிமலர்ச்சோலை, களம் முதலான பகுதிகளில் சங்க கால மக்கள் விளையாடியதாகவும் சான்றுகள் உள்ளன.

பல்லாங்குழி ஆட்டம் பொதுவாக பெண்களால் ஆடப்படுவது. முதலில் பூப்படைந்த பெண்ணின் ஓய்வு காலத்திலும், கருவுற்ற பெண்கள் அமர்ந்து பொழுது போக்குவதற்காகவும் மட்டுமே இந்த விளையாட்டை அப்போது ஆடினர். உலகெங்கிலும், பல்லாங்குழி ஆட்டம் சிறிய மாறுதல்களுடன், பழங்குடி மக்களிடம் விளங்கி வருவதை 'தமிழ்நாட்டு விளையாட்டுகள்' என்ற நூல் சிறப்பாகப் பேசுகிறது.

அரிக்கமேடு, உறையூர், அழகன்குளம், படைவீடு ஆகிய இடங்களில் நடந்த அகழாய்வுகளில், பக்கங்களில் புள்ளி எண் இட்ட நீள் செவ்வக வடிவத்தில் அமைந்த தாயக்கட்டைகள் கிடைத்துள்ளன. இவை சுடுமண்ணாலும், அரியவகைக் கற்களாலும் ஆக்கப்பட்டவை. மதுரை, திருநெல்வேலி போன்ற பகுதிகளில் வெண்கலத்திலான நீள் செவ்வக வடிவத்தில் அமைந்த தாயக் கட்டைகள் இன்றும் கிடைக்கின்றன.

நம்நாட்டில், பகடைகள் நெடுங்காலமாக உள்ளன என்பதற்கு சிந்து சமவெளியில் கிடைத்த பகடைகள் சான்றாக உள்ளன. பர்ஹூத் ஸ்தூபியில் செதுக்கப்பட்ட நான்கு பேர் விளையாடும் கட்ட விளையாட்டும், காய்களும் இந்த ஆட்டங்களின் தொன்மையைக் காட்டுகின்றன.

தமிழகத்தின் பழைமையான கோயில் கோபுரங்களில் கட்டம் மற்றும் வெட்டும் ஆட்ட அரங்கங்கள் செதுக்கப்பட்டுள்ளன. நிற்றல், நடத்தல், ஓடுதல், தாண்டுதல், குதித்தல், ஏறுதல், இறங்குதல், எறிதல், பிடித்தல், அடித்தல் போன்ற பல்வேறு வகையான உடல் உறுப்புகளின் ஒருமித்த இயக்கங்களின் உன்னத வெளிப்பாடுகளாகவே இந்த விளையாட்டுகள் உருவாகி இருக்கின்றன. விளையாட்டுகளின் முக்கிய நோக்கம் என்பது, ஒருவனுக்குரிய உள்ளாற்றலை, உயர்ந்த திறமைகளை வெளிப்படுத்திக் காட்டுவதுதான். அவனது ஆற்றலைக் காண்பவர்களும் மகிழ்ச்சியோடு, வாயாரப் புகழ்கிறார்கள்.

தொல்லைகளைத் தவிர்த்துவிட்டு, தொடரும் துயரங்களைப் போக்கிவிட்டு, எந்நேரமும் இன்பத்தையே அனைவருக்கும் அள்ளித்தருவதால் தான், விளையாட்டுகள் எல்லாம் அழிந்து போகாமல், விஞ்ஞான ரீதியாக வளர்ந்து கொண்டே வருகின்றன.

விளையாட்டின் மூலமாக மனநிலையில் பெரும் மாற்றம் ஏற்படும். விளையாட்டு உடலுக்கும், மனதுக்கும், புத்துணர்ச்சியை ஏற்படுத்தி, தெளிந்த நல் அறிவு பிறப்பதற்கு வழி வகுக்கும்.

அனைத்து நாடுகளிலும், பாரம்பரிய விளையாட்டுகள் உண்டு. அவரவர் தங்கள் நாட்டு விளையாட்டுகளை ஆதரிப்பதன் மூலம் விளையாட்டுத்துறையை மேம்படுத்தியும், முன்னோக்கியும் கொண்டு செல்கின்றனர். அது மட்டுமல்ல, தங்கள் கலாசாரத்தையும், பாரம்பரியத்தையும் அடுத்த தலைமுறைக்கு கொண்டு சேர்க்கின்றனர். குறிப்பாக ஐரோப்பிய நாடுகள், வளைகுடா நாடுகளில் வசிக்கும் இந்திய- இலங்கைத் தமிழர்கள் நமது பாரம்பரியமான பத்து கட்ட தாயம், தஞ்சாவூர் கட்டம், பரமபதம், பல்லாங்குழி, கல்லாய்காய், உறி அடித்தல், கயிறு இழுத்தல், பெண்களுக்கான கோலப் போட்டிகள் இப்படி பலவற்றை தங்களுடைய பாரம்பரிய ஆடைகளுடன் கொண்டாடி பெருமை சேர்க்கின்றனர்.

தமிழகத்தில் 20-30 ஆண்டுகளுக்கு முன்பு பொங்கல் திருநாளை முன்னிட்டு அரசு விடுமுறை விடப்பட்டால், அந்நாட்களை வீணடிக்காமல் நற்பணி மன்றம், தன்னார்வத் தொண்டு நிறுவனம், இளையோர் மன்றங்கள் என பல்வேறு சமூக அமைப்புகள் பொங்கல், திருவள்ளுவர் தினப் போட்டிகள் நடத்தி அசத்தினர். விளையாட்டுகளுடன் விடுமுறையைக் கொண்டாடி மகிழ்ந்தனர்.

ஆனால், தற்போது ஒரு சில அமைப்புகள் மட்டுமே இதனைத் தொடர்ந்து நடத்தி வருகின்றன. பல அமைப்புகள் காணாமல் போய் விட்டன. கணினி, கைப்பேசியில் ஆடும் ஆட்டங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றன. பாரம்பரிய விளையாட்டுகளைத் தொடர்பவர்களின் எண்ணிக்கையும் குறைந்து விட்டது.

விளையாட்டு என்பது விளையாடுவதற்காகவே. விளையாட்டில் யார் தோற்றாலும், வெற்றிபெற்றாலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய மன நிலையையும், வலிமையையும் அது உண்டாக்குகிறது.